ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

भूमिर्भ्राम्यति बुध एव मरुत:प्रत्यग्भ्रमोऽत्यद्भुतो
भ्राम्यन्त्येव सहाश्रयेण यदि वा ज्योतींषि सर्वाण्यपि ।
आवर्तोऽयमपां भ्रम: परिचिता मूर्तिर्हरस्याष्टमी
यासास्त्यप्पयदीक्षितो जयति सा मूर्तिर्निरस्तभ्रमा ॥

பூமியானது இடைவிடாது தனது அச்சின்பேரில் சுழன்றுகொண்டிருக்கிறது. காற்றின் மிகவும் அத்புதமான பிரத்யக்பிரமமானது யாவராலும் அறியப்பட்டதே. பின்னும் ஸகலமான ஜ்யோதிஸ்ஸமூஹங்களும் தங்கள் ஆதாரத்தோடுகூட பிரமித்துக்கொண்டிருக்கின்றன, ஜலங்களின் பிரமமேசுழல் என்பது. இவ்வாறிருக்க, பரமேசுவரனது எட்டாவது மூர்த்தியாய் நன்கறியப்பட்ட யஜமானரூபமான அப்பய்யதீக்ஷிதர் என்னும் மூர்த்தியொன்றே பிரமம் இல்லாதது.

அப்பய்யதீக்ஷிதரவர்களது பௌத்திரராயும் சிவலீலார்ணவம் முதலிய அனேக கிரந்தங்களை இயற்றினவரும் மகா பிரசித்திபெற்றவருமான நீலகண்ட தீக்ஷிதரவர்களை யறியாதார் வெகு சிலரே யாவர். அவர்கள் தமது சிவோத்கர்ஷமஞ்சரியில் ஈசுவரனது உருவாய் விளங்கிவந்த தீக்ஷிதரவர்களைப் போற்றுவது சிவோத்கர்ஷத்தையே கூறினதாமென்று நினைத்துத் துதித்த இந்த சுலோகத்தில் பூமி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், சூர்யன், சந்திரன் யாகங்களைச் சரியாய் அனுஷ்டித்த யஜமானன் ஆகிய அஷ்டமூர்த்தியான பரமேசுவர மூர்த்திகளுள், யஜமானஸ்வரூபரான தீக்ஷிதமூர்த்தி யொன்று தவிர மற்ற மூர்த்திகளுக்கெல்லாம் பிரமம் (சுற்றுவது) உண்டென்று கூறியிருப்பதை நன்காராய்ந்தவர்கள் யாவரும், ஈசுவரமூர்த்தியான பூமிக்குப் பிரமம் உண்டென்று நமது பூர்வீக வித்வத்சிரேஷ்டர்கள் நன்கறிந்திருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொண்டு பூமி சுற்றுவதில்லை என்ற தங்கள் சித்தப்பிரமத்தைப் போக்கிக்கொள்வார்கள் என்பது திண்ணம். சுபம்.

சிராத்தம்.

लोकान्तरेऽत्र भुवने च सुखप्रदं नः
शास्त्रोक्तमार्यनिकरैस्समनुष्ठितं यत् ।
श्राद्धाभिधं तदनुसृत्य च कर्म किञ्चित्
श्रीदेशिकेन्द्रकरुणाबलतो लिखामि ॥

ஆஸ்திகர்களான ஹிந்துக்களுக்கு சுருதி, ஸ்மிருதி புராணம் முதலியவைகளே முக்கிய பிரமாணங்களாகும். அவைகளில் எந்தெந்த வர்ணத்தார்களுக்கு எந்தெந்தக் கர்மாக்களை எவ்விதம் செய்யவேண்டுமென்றும், எவைகளை விலக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கின்றதோ, அவ்விதம் அனுஷ்டிக்கவும் விலக்கவும் வேண்டும். சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை 'நம் யுக்திக்குப் பொருத்தமாயில்லை' என்று விடவும், செய்யக்கூடாதென்கிற கர்மாக்களை 'யுக்திக்கு சரியாயிருக்கின்றன' என்று அனுஷ்டிக்கவும் கூடாது. சாஸ்திரார்த்தங்களை முக்கியமாய் எடுத்துக்கொண்டு அவைகளுக்கு விரோதமின்றி நம் யுக்தியையும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்தப் பிரமாணங்களும் இவைகளை நன்கறிந்தொழுகும் மஹான்களுடைய வாக்கு, நடத்தை என்கிற இவையும் தர்மத்திற்கு முக்கிய ஸாதனங்களாகும். இக்கருத்தையே மனு ஸ்மிருதியிலும் யாக்ஞவல்க்ய ஸ்மிருதியிலும் நன்கு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களை முக்கியமாய்க்கொண்டு அவைகளில் கூறிய

படி தர்மானுஷ்டானங்களைச் செய்தால்தான் நாம் சிரேயஸ்ஸை யடையலாமென்றும், அவ்விதமனுஷ்டிப்பதே இம்மானிடப் பிறவிக்கு ஸாபல்யமென்றும் நன்கறிந்து நம்முன்னோர்களனைவர்களும் அனாதிகாலம் தொடங்கிச் சகல தர்மங்களையும் விதிப்படி சரியாய் அனுஷ்டித்துவந்தார்கள். அவைகளில், கலியின் கொடுமையாலோ நம்போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரத்தைக்குறைவாலோ மஹான்களின் மறைவாலோ நம் தேசத்தலைவர்களுக்கு இதில் அபிமானங்குன்றியதாலோ வேறு யாது காரணத்தாலோ அக்கினிஹோத்திரம், யாகம் முதலிய பல தர்மங்கள் நம்மைவிட்டு மெள்ளமெள்ள விலகி ஓடிவிட்டாலும் ஸந்தியாவந்தனம், பிதுர் சிராத்தம் என்கிற இவ்விரண்டு கர்மாக்கள் மாத்திரம் விலகி ஓடவில்லை. ஆனால், இவைகளைக்கூட சிலபேர்கள் நன்கு செய்யாவிட்டாலும் கேட்பவர்களுக்கு நாங்களனுஷ்டிக்கிறோமென்றே சொல்லுகிறார்களேயன்றி, 'அனுஷ்டிக்கவில்லை; இவை வேண்டாம்' என்று முன்னுக்கு வந்து, தைரியமாயுரைக்க இன்னும் துணியவில்லை. இந்த மாதிரிக் காரியத்தில் ஆஸ்திகர்களான வேதியர்களுக்கு அதிக சிரத்தையும் பக்தியுமிருக்கிறதென்பது யாவராலும் நன்கறியப்பட்ட விஷயம். இந்த இரண்டிற்குள் சிராத்தமென்னும் கர்மாவைப் பற்றி கொஞ்சம் விசாரிப்போம். சிராத்தமென்கிற இக் கர்மாவை அவசியமாய் நடத்தவேண்டுமென்று எல்லாஜனங்களும் அங்கீகரித்திருப்பதால்தான், ஒரு மனிதன் அவசியம் செய்யவேண்டுமென்கிற நியமமில்லாத காரியத்தைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்துங்கால் இதுவும் சிராத்தகாரியமோ என்று அவசியம் நடத்தவேண்டிய சிராத்தகாரியம்போல் இதல்லவென்று இதைத் திருஷ்டாந்தமாகக் கூறுகிறார்கள் "எப்படி ஒவ்வொருதினமும் காபி முதலிய ஆகாரங்களால் சரீரத்திற்கு 'ஆரோக்கியம்' முதலிய குணங்களும் அவை இல்லாவிட்டால் சோம்பல், தலைநோய் முதலிய ரோகங்களும் உண்டாகின்றன" என்றெண்ணி நியமம் தவறாமல் செய்கிறோமோ, அவ்விதமே சிராத்தமென்கிற கர்மாவையும் செய்தால், இவ்வுலகிலும் பர

லோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸை அடைகிருனென்றும் இதைச் சரியாய் நியமத்துடன் அனுஷ்டிக்காவிடில் விசேஷ மான கெடுதி சம்பவிக்குமென்றும், தேவதைகளை யுத்தேசித்து நடத்தவேண்டிய கர்மாக்களையும் பிதுருக்களை யுத்தேசித்துச் செய்யவேண்டிய கர்மாக்களையும் தவருமல் நடத்தவேண்டும். மனிதனுக்கு பிறக்கும்பொழுதே ஏற்படும் தேவருணம், பிதுர் ருணம், ரிஷிருணம் என்கிற இம்மூன்றுகளில் பிதுரிணத்திலிரு ந்தும் விடுபடவேண்டுமானுல் சிராத்தம் தர்ப்பணம் முதலிய கர்மாக்களைச் சரியாய் அனுஷ்டித்தாலன்றி முடியாது. இந்த அனுஷ்டானம் எச்சமயமும் நன்கு நடைபெறவேண்டுமானுல் புத்திரரின்றி முடியாது. இதற்காகத்தான் புத்திரனை அடைய வேண்டுமென்று சுருதியிலும், 'பிரஜைபாகிற நூலை அறுக்கா திருக்கக்கடவாய்' என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக் கிறது. அவ்விதமுண்டாகும் புத்திரனுல் பிதுருக்களுடைய ருணத்திலிருந்தும் விடுபடுகிருனென்று சுருதியால் நன்குவெளி யாகிறது. இங்குச்சொல்லப்பட்ட சுருதியின் அர்த்தானுவாத த்தால் சிராத்தமென்கிற கர்மாவை விடாமல் சரியாய் அனுஷ் டிக்கவேண்டுமென்று தெரிகிறது. இதைப் பலவிதமான கால விசேஷத்தை நிமித்தமாகக்கொண்டு அநேகப் பிரகாரமாய்ச் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தா லும் அவைகளுக்குள் தர்சசிராத்தம், ஒவ்வொருவருஷத்திலும் பிதுருக்கள் மரித்த தினத்தில் செய்யவேண்டிய சிராத்தம், மஹாளயசிராத்தம் முதலான இவைகளை அவசியம் செய்தே தீரவேண்டும்.

(இன்னும் வரும்)

ஆர்ஜவம்.

ஆர்ஜவம் அனார்ஜவம், அகௌடில்யம், கௌடில்யம், அவக்ரத்வம், வக்ரத்வம் இவைபோன்ற இரட்டை வார்த்தைகள் ஒன்றோடொன்று விருத்தமானவை.

ஆர்ஜவம் என்றால் என்ன ? ஒழுங்கு, கபடின்மை, உள்ளத்தில் உள்ளபடியே உரைத்தல், பிறரை மோசஞ்செய்யாமை, வணக்கம், இத்யாதி பொருள்படும் பதமே 'ஆர்ஜவம்' எனப்படும். ஆர்ஜவமின்மையே அனார்ஜவம், கௌடில்யமாம். ஆர்ஜவத்தை யாவரும் ஆதி (பால்யம்) முதல் அபிவிர்த்தி செய்ய வேண்டும். ஆர்ஜவகுணமே எல்லோரையும் ஆவர்ஜனஞ் செய்யும். ஆர்ஜவமற்றவன் அவமானப்படுவான். உள்ளத்தில் உள்ளபடி உரைக்கும் உத்தமகுணம் அமைவது மிகவரிதாம். எத்தனையோ ஜன்மங்களில் செய்த புண்யத்தால்தான் அது கிட்டுமாம்.

இவ்வார்ஜவமே நல்லொழுக்கத்திற்கு அங்குரம் (முளை) போன்றது. அனார்ஜவமே வெகு இழுக்கிற்கு இருப்பிடமானது. (ஆர்ஜவம்) ஒழுங்குள்ளோனைக்கண்டு, அரி (சத்ரு) (விஷ்ணு)யும் ப்ரீதிகொள்வான்.

'நல்லொழுக்க மில்லாரோ டிணங்கவேண்டாம்' என்ற ஔவைப் பிராட்டியாரின் திருவாக்கைக் கவனித்தால், நல்லொழுக்கமுள்ளாரோ டிணங்கவேண்டும் என்று தொனிக்கின்றது. ஒழுக்கமற்றவருடன் கூடிக்குலாவிப் பணத்தை விரயஞ்செய்து நட்பை விர்த்திசெய்வதைவிட, ஒழுக்கம் வாய்ந்தோருடன் பகைமை பாராட்டுவதே ப்ரசஸ்தமானது, அஃதே பணத்தை விர்த்திசெய்யும் என்னும் கருத்தை ஸ்ரீ பாரவிமஹாகவி, கிராதார்ஜுனீய காவ்யத்தில்

समुन्नयन् भूतिमनार्यसंगमाद्वरं विरोधोऽपि समं महात्मभिः ।

(1-வது ஸர்க்கம், 8-வது சுலோகம்.)

'துர்யோதனன் கெட்டவர்களுடன் பழகுவதைவிட, தம்மு டன் விரோதங்கொள்வதே மேன்மை என்றும், அபிவிர்த்திக்கு அனுகூலம் என்றும் நினைக்கிறான்' என்று சாரணைகப்போய்வந்த வேடன் தர்மபுத்ரரிடம் முறையிடுவதாக வர்ணித்திருக்கிறார்.

संसर्गजा दोषगुणा भवन्ति ।

நல்லதும் கெட்டதும் பழக்கவழக்கத்தால் பிடிபடும் என்றபடி நல்லொழுக்க முற்றவருடன் உறவாடினல் நற்குணம் ஏற்படும்; தீயவொழுக்கம் பெற்றவருடன்பழகினல் தீயகுணமேஏற்படும். தாறுமாருகத் திரிவோர்களுக்கு நல்லோரிணக்கம் ஏதோ ஒரு ஜன்மத்தில் செய்த புண்யவசத்தால் மிகப் பிரயாஸத்தாலே கிடைக்குமாம்.

सतां सद्भिः सङ्गः कथमपि हि पुण्येन भवति ।

என்றார் ஸ்ரீ பவபூதி மஹாகவி உத்தரராம சரித்ரத்தில். மேலும் இவ்வுலகிலுள்ள பொருள் யாவற்றிலும் பற்றுதலை யொழிக்க வேண்டும் என்று சுருதி ஸ்மிருதி புராணுதிகள் கெம்பீரமாக வும் இனிமையாகவும் போதிக்கின்றன; அதில், 'ஸங்கம்' எனும் சேர்ந்து பழகுதலை எவ்விதத்திலும் விலக்கமுயலவேண் டும்; ஒருவேளை அப்படிச்செய்யப் பிடிக்காவிடில், நல்லோ ரோடு பழகல்வேண்டும்; அப்படி நல்லோர் ஸஹவாஸம் நிகழு மாகில், அதே எல்லாப் பற்றென்னும் வியாதியைப் பறக்கடிக் கும் மருந்தாம் என்று ஸ்ரீ சுகப்ரஹ்மரிஷி கூறியிருக்கின்றார்—

सङ्गः सर्वात्मना त्याज्यः स चेत् त्यक्तुं न रोचते ।
सत्स्वेव विहितः सोऽयं सङ्गः सङ्गस्य भेषजम् ॥

ஆர்ஜவமுள்ளோரின் ஆத்மாவே நற்கதிபெற்று பரமானந்தஸ்வ ரூபத்தை உய்விக்கும். கௌடில்யம் (கோணல்) உள்ளவர்களின் ஆத்மாவோ, ஸதா பிறருக்கு வஞ்சனைசெய்யும் கொடிய சிந்தனைகளால் கலக்கமுற்று ஹீனகெதியைபடைந்து பரிதபிக்கச் செய்யும்.

இதற்கு ஓர் நிதர்சனம் கூறுவோம். அயோத்யாபுரியை ஆண்ட தசரதசக்ரவர்த்தி மிதிலாபட்டணத்தினின்றும் மணக் கோலங்கொண்ட இராமர், லக்ஷ்மணர் முதலாய தநயர்களுட னும், ஸீதை, ஊர்மிலை, முதலிய மருமகளுடனும் நிஜநகரியை நோக்கி ஒய்யாரமாகத் திரும்பிவருங்கால், பரசுராமர் வழியில் கண்டு, அஹங்காரங்கொண்டு, அரசனின் குசலவசனத்திற்குச் செவிகொடாமல், ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியிடம் தனது கோடரியை வளைத்து ஞாணேற்றும்படி வேண்ட, உடனே இராமபிரான் அப்படியே அதை வணக்கி, ஞாண்கயிறேற்றி, பேதிக்கவேண்டிய குறிப்பை வினவ, 'ராமபாணம் வீணாகாது' ஆகையால் தனது பரகதியைப் பறிகொடுத்தார் பார்க்கவர் என்று ஸ்ரீமத் இராமாயணத்தில் படித்திருக்கிறோம். இதை மிக வழகாக ஸ்ரீ போஜமஹாராஜா வர்ணித்திருக்கிறார்.

युगपत्प्राप्तगुणयोश्चापभार्गवरामयोः ।
ऋजुता वक्रतां प्राप वक्रता च तथाऽऽर्जवम् ॥

முதலில் பரசுராமர் அஹங்காரமேலிட்டால் வணங்காமுடிமன் னன்போல தற்குணமுடையவராய்,(வக்ர)கோணல் மனங்கொ ண்டு ஆடினார். அவரது ஆயுதமாகிய கோடரியோ, கோணல் அன்னியில் (ருஜு) ஒழுங்காயிருந்தது; ஸ்ரீ இராமபத்ரர் அவர் வேண்டுகோளுக்கிணங்கி, கோடரியை வில்லுபோல் வளைத்து, ஞாண்கயிறு சூட்டவே, அவர் நற்குணம் பெற்று, கோணச்சித் தம் சிதைந்து ஆர்ஜவம்(ஒழுக்கம்)அடைந்தார்; அன்னார் (பரசு) கோடரியோ அனார்ஜவம் — வக்ரதை — கோணல் அடைந்து, குறிப்பையடிக்க ஸாதனமாகி, அவருக்கு ஸ்வர்க்கலோகம் கிட்

டாமற்செய்தது. இதினின்றும் ஓர் நீதியும் புலப்படுவதாக போஜராஜர் விவரித்திருக்கின்றார்.

नूनं जनेन पुरुषे महति प्रयुक्तं आगः परं तदनुरूपफलं प्रसूते ।
कृत्वा रघूद्वहगतेः क्षणमन्तरायं यद्भार्गवः परगतेर्विहतिं प्रपेदे ॥

'மஹான்களிடம் ஆர்ஜவமாய் நடக்காதவன் தகுந்த தண்டனையடைவான், கோதண்டராமனுக்கு இடறுசெய்த (கோணகுணமுள்ள) கோடாரிராமன்போல' என. இவ்வார்ஜவகுணமே உண்மைபேச உதவியாகி உயர்ந்த பதவிக்கு துணைசெய்கின்றது. இதே க்ஞானஸாதனமாகி ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகிய பரம்பொருளை கரதலாமலகம்போல பிரகாசப்படுத்துகின்றது; ஆர்ஜவகுணம் அமையப்பெற்றோர்களே ஆர்யர்கள் எனப்போற்றப்படுகிறார்கள்; அனார்ஜவமுடையோர் அனார்யர்கள் எனப் பழிக்கப்படுகிறார்கள். ஆகையால் நாமெல்லோரும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்போல கருணைக்கடலாகிய ஸதாசார்யர்களுடைய கருணாகடாக்ஷம் பெற்று ஆர்ஜவத்தை அபிவிர்த்திச்செய்து ஆத்மானந்த ரூபிகளாக ஸகல வல்லமையுள்ள ஸ்ரீ திரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வரரை அனுதினம் வணங்குவோம். சுபம்.

K. A. இராமலிங்க சாஸ்திரி
'ஸம்ஸ்கிருத காமதேநு' பத்திராதிபர்.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் சரிதம்.

(சஅ-வது பக்கத்தொடர்ச்சி.)

இம்மஹான் தாமியற்றிய "சிவலீலார்ணவ மஹாகாவ்யத்தில்" திருஞான சம்பந்தஸ்வாமிகள் விஜயஞ்செய்து, சமணர்களோடு வாதம் புரிந்ததில் வர்ணித்திருக்கிற, இரண்டு சுலோகங்களை, எடுத்துக்காட்டுவோம். சமணர்கள் எழுதி, வைகைப் பிரவாகத்தில் போட்டபோது, அது சமுத்திரத்தை நோக்கிச் சென்றது.

அஃதாவது, 22-வது ஸர்க்கம் 19-வது ச்லோகம்

संसारतापानखिलान्निहन्तुं
शक्तोत्यहिंसैव हि शाक्यदृष्टा ।
नार्च्यो महेशो न शिवा विभूति-
रित्यार्हताः स्वामलिखन्प्रतिज्ञाम् ॥

ஸமஸ்த ஸம்ஸாரதாபங்களை நாசமாக்கக்கூடிய சக்திபெற்றது அஹிம்ஸை ஒன்றுதான் என்று சாக்யமுனிவரின் கொள்கை. பரமேச்வரனை யர்ச்சிப்பது கூடாது. விபூதி மங்களமான வஸ்துவாகாது என்று சமணர்கள் தங்கள்பிரதிக்ஞையை எழுதினார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்தது. 22 வது ஸர்க்கம் 20-வது சுலோகம்.

वेदाः प्रमाणं सह कामिकाद्यै-
र्विश्वाधिकः शंकर एक एव ।
भस्मैव धार्यं भुवि मोक्षमाणै-
रित्यालिखत्स्वां स गुरुः प्रतिज्ञाम् ॥

காமிகம் முதலான ஆகமங்களுடன் வேதங்கள் பிரமாணமாகும். பிரபஞ்சாதீதரான, கடவுள் சங்கரர் ஒருவரே. உலகில் மோக்ஷத்தை விரும்புகின்றவர்களால் தரித்துக் கொள்ளக்கூடியது

விபூதியொன்றே, என்று அந்த குரு தமது பிரதிக்ஞையை எழுதினார்.

இவ்விதம் எழுதப்பெற்ற ஏடே எதிர்த்துச் சென்று திருவேடகத்தில் எடுக்கப்பட்டது என்று முன்னமேயே, திருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாற்றில் எழுதியுள்ளோம்.

இந்த மஹானன நீலகண்டதீக்ஷிதர், நாயக்கரால் வேண்டிக்கொள்ளப்பட்டும். மந்திரிபதவியில் விருப்பமில்லாதவராய், தாம்பரபர்ணிதீரத்தில், மீதியான வாழ்நாளைகடத்த உறுதிகொண்டார்; அப்போது நாயக்கர், அம்மஹான் திருவடிகளில் விழுந்து பிரார்த்தித்தபோது, மீனாக்ஷிசுந்தரேசுவர்களுக்கு வேண்டிய திருப்பணியும், உத்ஸவாதிகளும், எமதிஷ்டப்படியே, நீர் நடத்திவருவதால், உமக்குக் குறைவுகிடையாது. பரமேசுவரரின் கிருபை உமக்குக் கிடைக்கும். ஆனாலும், உமது பிறந்த நாள் தைப்பூச நக்ஷத்திரமானதால் அன்றையதினம், தெப்பக்குளத்தில் மையமண்டபத்துக்குத் தெப்பங்கட்டி, அதில் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரரை யெழுந்தருளச் செய்து திருவிழாக் கொண்டாடும்படி, ஸ்திரமான ஏற்பாடு செய் என்று அனுக்கிரஹித்தார். அவர் ஆக்கினைப்படி இதுகாறும் தைப்புஷ்யத்தில் அவ்வுத்ஸவம் நடைபெற்று வருகிறது. அக்குளம் தெற்குவடக்கில் 1000-அடி நீளமும், கிழக்குமேற்கில் 950-அடி அகலமும் உள்ளது. அதன் அழகைப்பற்றி மற்றொரு ஸந்தர்ப்பத்தில் கூறுவோம். தீக்ஷிதரவர்கள், தாம்பரபர்ணி தீரத்தில் கோழியின் த்வனிகூட கேட்காதவண்ணம், ஒதுப்புறமாய், அக்ரஹாரத்தை நிர்மாணித்து, வேதாகமங்கள் முதலான வித்தைகள் கற்று, அதன்படி நடந்துவரும் வேதியர்களோடு, வாழ்நாள் கடத்தினர் என்று, என் மதிக்கெட்டியவாறு சுருக்கமாய் இம்மஹான் சரித்திரத்தை எழுதி உபஸம்ஹாரம் செய்யலானேன்.

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

தர்மம்.

(முன் தொடர்ச்சி.)

பெரியோர்களே! இவ்வளவையும் கேட்ட நீங்கள் இனி வேதமார்க்கமான தர்மத்தைப் புதிதாய்ப் பொதுவாய் ஸர்வ ஜனங்களும் சகோதரப் பான்மையுடன் அனுஷ்டிக்கும்படி ஏற்படுத்துவதாய் உத்தேசமா? அல்லது காலத்திற்குத்தக்கவாறு நமக்கு ஸௌகரியமாயிருக்கும் தர்மத்தைமட்டிலும் வேதசாஸ்திரங்களிலிருந் தெடுத்துக்கொண்டு மற்றவைகளை சட்டசபை நிபுணர்கள்போல் சட்டம் செய்யலாமென்ற உத்தேசமா? முதலிற்சொன்னதானல் அதற்காக நீங்கள் சிரமப்படவேண்டாம். நம்முன்னோர்களே யோசித்து அதற்குவேண்டிய ஸௌகரியங்களைச் செய்து வைத்திருக்கிறார்கள். இரண்டாவது வழி என்றால் அதில் ஆக்ஷேபணை பல ஏற்படும். என்னவெனில், காலத்திற்குத்தக்க தர்மத்தை ஸௌகரியம்போல் திருத்த சட்டசபை மெம்பர்களுக்கே நாம் அதிகாரம் கொடுத்துவிடுகிறதா? அல்லது வேதசாஸ்திரம் கற்ற பெரியோர்களை வைத்துக்கொண்டு லோகோபகார பாரத்தைச் சுமக்கும் லௌகிகர்கள் தனியாய்ச் சேர்ந்து சபை ஏற்படுத்தி அதில் தீர்மானம் செய்கிறதா? அல்லது மடாதிபதிகளுக்குமட்டும் அதிகாரம் கொடுக்கிறதா? வைதிக லௌகிக ஸபையில் வைதிகர்களுக்கு பிரதானமா? லௌகிகர்களுக்கு பிரதானமா? வைதிகர்களுக்குத்தான் என்றால் உண்மையாய் வேதசாஸ்திரங்கற்றறிந்த பெரியோர்களது சபையில் லௌகிகர்கள் எதற்காக வரவேணும். வேதசாஸ்திர விரோதமான லௌகிகர்களது யுக்தியை அப்பெரியோர்கள் ஒருநாளும் ஏற்றுக்கொள்ளமாட்டார்களே. இனி லௌகிகர்களுக்கு கட்டுப்பட்ட சாஸ்திரிகளை வைத்துக்கொண்டு திருத்தலாமே யென்றால் வயிற்றுப் பிழைப்பைப் பெரிதாய் நினைத்து லௌகிகர்களது வீட்டுவாசலில் காத்துநிற்கும் எம்போலிய

சாஸ்திரிகள் அய்யரவாள் சொல்வது சரி, அப்படித்தான் சாஸ்திரம் இருக்கிறது என்று சொல்லும் சாஸ்திரத்தை எத்தனை பெயர் ஒப்புக்கொள்வார்கள். அதுவும் அய்யரவாள் சாஸ்திரமாகுமேயொழிய உண்மையான சாஸ்திரமாகாது. திருஷ்டாந்தமாக சில வருடங்களுக்கு முன்னால் காஞ்சிபுரம் பரிஷத் திருவாதி பரிஷத் என்று இரண்டு லௌகிக வைதிக பரிஷத் நடந்தது ஞாபகமிருக்கலாம். அதில் அய்யரவாளுக்குக் கட்டுப்பட்ட சாஸ்திரக்ஞர்களும் ஸ்வதந்தர சாஸ்திரக்ஞர்களும் அநேகர் கூடியும் அய்யரவாள் சாஸ்திரக்ஞர்களுக்கு நடந்த மரியாதையும் ஸ்வதந்திர சாஸ்திரக்ஞர்களுக்கு நடந்த மரியாதையும் அநேகருக்கு ஞாபகமிருக்கலாம். அதைப்பற்றி இங்கு பெயர்களைச்சொல்லி விஸ்தாரப்படுத்துவது பரம அலௌகிகமாய் முடியும். அதைப்பற்றி சுருங்கச்சொன்னால் அதை ஆதியில் கூட்டின லௌகிகர்களது எண்ணம் காலத்திற்குத்தக்கபடி சில தர்மங்களை சீர்திருத்தவேண்டுமென்பதுதான் உத்தேசமாம். அப்படிக்கு இந்தப் பண்டிதர்களைக்கொண்டு சீர்திருத்த முடியாதென்று திருவாதி பரிஷத்தோடு அந்த உத்தேசத்தை விட்டுவிட்டார்கள். அவ்விரண்டு சபைக்கும் நான் போனவனாதலால் இவ்வளவுதூரம் எழுதினேன். இனி மடாதிபதிகளைக்கொண்டு செய்யச் சொல்வோமென்றால் இப்படி எண்ணுவது மிகத்தவறு. ஏனெனில் நாம் சொன்னதைக் கேட்பதற்காக ஏற்பட்ட மடாதிபதிகளல்ல. அவர்கள் நமது ஆசார்யர்கள். நாம் அவர்களது சிஷ்யர்கள் என்ற ஞாபகம் நமக்கிருக்கவேண்டும். அப்படி இருந்தால் நாம்போய் அவர்களை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்பது மிகத்தவறு. அவர்களுக்கே எல்லாம் தெரியும். அவர்களுக்குத் தெரியாததை நாம் சொல்வது என்பது வழக்கமல்ல. குரு ஒரு சமயம் வரம்புமீறினால் சரியாய் நடந்துவரும் சிஷ்யன் அவரது குற்றத்தை எடுத்து ரகஸ்யத்தில் சொல்லலாம். அப்படியும் கேட்காவிடில் அவரைத் தள்ளிவிடலாமென்று சாஸ்திரம் இருக்கிறது. நாம் இப்போது நமது முன்னோர்கள் கட்டளைப்படி என்ன சிஷ்ய

முறையில் வழுவாமல் நிற்கிறோம். அவர்கள் என்ன வழியில் முறைதப்பி இருக்கிறார்கள். எதைப்பற்றி அவர்களைக் கேட்கப் போகிறோம். முன்னோர்களது தர்மம் நம்மிடத்தில் என்ன என்ன மீதிருக்கிறது. எது சீர்குலைந்து நிற்கிறது. எதை சரி செய்யப்போகிறது. கொஞ்சம் தீர்க்கமாய் ஆலோசியுங்கள். வீட்டை சீர்திருத்துகிறது, பாதையை சீர்திருத்துகிறது என்று சொன்னால் முன்கட்டப்பட்டிருந்த அவைகளில் ஏதாவது நிலைகெட்டிருக்கும் அதை முன்போல் சரிப்படுத்துவதற்கு சீர்திருத்தமென்று சொல்வதைக் கண்டிருக்கிறோம். அதில் பழைய கட்டடம் முதலிய புதுப்பிக்கப்பட்டிருக்கும். அதை முழுவதுமே இருந்தவிடம் தெரியாமலே இடித்துவிட்டு வேறு மாதிரியாய்க் கட்டிவிட்டால் அதை சீர்திருத்தமென்று சொல்வது வழக்கமேயில்லை. அந்தக்கட்டடம் இருந்தவிடம் இது தானோ? அதன் ஸ்வரூபமே இல்லையே என்பார்கள். ஆசாரச் சீர்திருத்தக் காரர்கள் நாம் அனுதினமாய் நடத்திவரும் தர்மத்தில் குறைவு இருப்பதை சீர்திருத்தப் பாடுபடுகிறார்களா? இதையே எடுத்துவிட்டு வேறு கட்டடம் கட்டவே பார்க்கிறார்களா? அப்படியாயின் அது சீர்திருத்தம் என்று பெயர் பெற மாட்டாதென்பதை முன்னமேயே நிரூபித்தேன். ஆகவே நாம் மடாதிபதிகளைக் கேட்டுக்கொள்வதென்பது தகுதியல்ல. அவர்களுக்கே குறைவு நிறைவு தெரியும். ஆனால் தர்மம் இவ்வளவு சீர்குலைந்துபோன காலத்தில் என்னகார்யம் செய்துவருகிறார்கள் என்றால் அவர்கள் லோகத்திற்காகப் பாடுபடுவதாய்த் தெரியவில்லை. ஆயினும் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் சுமார் 4 வருடங்களாக ஆங்காங்கு விஜய யாத்திரை செய்து பக்த கோடிகளின் பிரார்த்தனைப்படி அங்கங்கு கிராமங்களிற் பிரவேசித்து காலத்திற்குத்தக்கபடி பிராம்மண்யம் ஒன்றைமட்டிலும் நிலைநிறுத்துவதற்காக ஆங்கிலம் கற்கும் பிர்மசாரிப் பையன்களுக்கு நல்லுபதேசம்செய்து அவர்களை அதிகாலையில் எழுந்து ஸ்நானம்செய்து ஸந்தியாவந்தனம் ஸமிதாதானம் முதலியதை

செய்தபின் என்ன ஆகாரம் வேண்டுமானாலும் செய்துகொண்டு தங்கள் தங்கள் பள்ளிப்பாடங்களைப் படிக்கும்படி செய்துவரு கிறார்கள். நான் போனவருடம் மாயவரம் போயிருந்த காலத் தில் காலையில் ஒவ்வொரு அக்கிரகாரத்து திண்ணையிலும் பார்த் தேன். மாணுக்கர்கள் பிர்மதேஜஸ்ஸுடன் நெற்றியில் திரிபுண் டிரமும் கறிப்பொட்டும் தரித்துக்கொண்டு பாடங்களைப் படித் துக்கொண்டிருந்தார்கள். வெளியிற் புறப்படும்போது தண்டம் தரித்தே செல்கிறார்கள். இம்மட்டா, கிருகஸ்தர்களையும் ஒவ் வொருநாளும் கூப்பிட்டு ஒவ்வொருவரையும் இனி தினம் தோறும் காயத்ரீயை லக்ஷஸஹஸ்ரமாவாது செய்துவருவதாய்ப் பிரதிக்ஞை செய்யும்படி லௌகிகமாய்ச்செய்து விஜயம்செய்து வருகிறார்கள். இவ்விதமே ஒவ்வொரு மடாதிபதிகளும் கிளம்பி ஆங்காங்கு கார்யம்செய்ய வாரம்பித்துவிட்டார்களானால் நமது சீர்திருத்தக்காரப் பெரியோர்கள் இருந்தவிடம் தெரியாமற் பஞ்சாய்ப் பறந்துவிடுவார்கள். அப்படிக்கு ஈசுவரசம்மத மில் லாததால் அவர்கள் நிஷ்டையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே மடாதிபதிகளை நாம் கேட்டுக்கொள்வதென்பது சரி யல்லவென்று இதை விடுவாம். அவ்விதம் செய்வதும் சாஸ்தி ரோக்தமான தர்மம் ஆகாது.

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரீ.

ஸ்ரீ ராமவிஜயம்.

ஸ்ரீமத் சுந்தரகாண்டம், அத்தியாயம் 1.

ஜகன்மங்களரூபனான சூரியபகவானையும் திரைலோக்கிய நாதனான மஹேந்திரனையும், தந்தையான வாயுபகவானையும் தனது விக்கிரமங்களுக்கெல்லாம் காரணமான பிர்மதேவனையும்

நினைத்து அஞ்சலிசெய்து, ஆகாசத்தில் கிளம்ப நினைக்கவே திடீரென்று மேலும்மேலும் ஆஞ்சனேயன் பெருத்தார். கைகளாலும் கால்களாலும் தானிருந்த மலையைக் கலகலக்கச்செய்து உடம்பை ஒரு தடவை ஆட்டிக்கொண்டார். அஹஹாவென்று ஓர் தடவை கர்ஜித்தார். வாலை ஒருதடவை மடக்கிநீட்டினார். கைகளிரண்டையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு, கால்களைச் சேர்த்துநிறுத்திப் போகவேண்டிய மார்க்கத்தைக் கண்களால் அளந்து பார்த்துக்கொண்டு பிராணுபாமங்களுடன் "வாயு வேக மனோவேகங்களை மீறி ஸ்ரீ ராமனால் விடப்பட்ட பாணமானது எப்படிச்சென்று விக்கிரமத்தைக் காட்டி சத்துருவை ஓட்டி, காரியசித்தியுடன் திரும்பிவருமோ அவ்விதமே இதோ ஒரு நொடியில் சென்று, தேவியைப் பார்த்துவருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே பர்வதத்தைக் கால்களால் உதைத்துக்கொண்டு ஆகாசத்தில் கிளம்பினார். சாரணர்கள் என்ற தேவர்கள் இனிய பதங்களால் அன்னை சீதையின் அருமை பெருமைகளைப் புகழ்வதினின்று அந்த லோகமாதாவின் அடிச்சுவட்டைப் பிடித்துக்கொண்டுபோய், கண்டுவிடலாம் என்று நிச்சயித்தவராய் அந்தகாயகர்கள் சஞ்சரிக்கும் ஆகாயமார்க்கத்தைக் கைகளால் அளாவிக்கொண்டு தாண்டினார். இவரது சாகஸம், ஒருவராலும் அண்டமுடியாத ஆலகாலத்தை நிமிர்த்தின கழுத்துடன் அமுதாய் உட்கொண்ட சிவபெருமானது செயலையும் பரிகாசம் செய்தது. அவரது வேகத்தினால் இழுபட்டு மரங்கள், கொடி, செடி, பக்ஷிகளுடன் அம்மலை வெகுதூரம் பின்சென்றது. ஆச்சரியமான இவரது பராக்கிரமத்தைத் தேவர்கள்கூடி அந்தரத்தில் நின்றுபார்த்தார்கள். அவரது வேகத்தாலிழுபட்ட ஜலங்கள் தளும்பித் ததளித்து வெகுதூரம் உயர்ந்து பிரளய காலம்போல் சமுத்திரத்தைக் கரைதாண்டச் செய்தன. கருப்பும் வெண்மையும் சிவப்புமாய் பல வர்ணங்களுடன் வழியில் நின்ற மேகங்களைப் பிளந்துகொண்டுபோகும் அவர்மீது தேவர்கள் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். சூரியன் அவர்மீது கிரணங்களை குளிர்ந்தே வீசினார்.

கந்தர்வர்கள் இவர் பெருமையைப் பாடினர். சமுத்திர ராஜனது ஏவலால் இறக்கையுடன் ஜலத்தில் மறைந்திருந்த மைநாகமென்னும் கிரி சமுத்திரத்தின் மேலாக உயர்ந்து நின்று "வானரசிரேஷ்டனே! தங்கள் தந்தையான வாயுவின் உதவியால் வஜ்ராயுதத்தினுல் எனது சிறகுகளை வெட்டவந்த மகேந்திரனிடம் தப்பினேன். அம்மாருதனின் குமாரனுன தாங்கள் என்மீது உட்கார்ந்து கொஞ்சம் களைப்பாறிப்போக வேண்டுகிறேன்." என்று பிரார்த்திக்க ஹநுமான் எனக்கு களைப்புமில்லை, நிற்க அவகாசமுமில்லை, மன்னிக்கவேண்டும். போய் வருகிறேன் என்று சொல்லிக் கைகளால் மாத்திரம் அம்மலையைத் தொட்டுவிட்டு இமைப்பொழுதில் வெகுதூரம் தாண்டிவிட்டார். நடுவழியில் ஸுரஸை என்னும் தேவதை, பயங்கரமான உருவங்கொண்டு ஆவென்று வாயைத்திறந்து இவரை விழுங்கவர, அவளுடைய வாய்க்குப் பெரியவராய் இவர் பெருக்க, ஸுரஸை வாயை இன்னுமகற்ற, இவர் உருவத்தை மேன்மேலும் பெரிதாக்க, அவள் ஆச்சரியப்பட்டு மறுபடியும் பார்ப்பதற்குள் தனது உருவத்தைச் சுண்டுவிரல் பிரமாணமாய்ச் சிறிதாக்கிக்கொண்டு அவள் இவரைக்காணேமே யென்று விலகும் சமயம் இவர் தாண்டிநின்று, "நான் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் வெகுதூரம்சென்ருர். சிறிது நேரத்திற்கெல்லாம் இவருடைய வேகம் அடக்கப்பட்டது. எவ்வளவு பிரயத்தினங்கள் செய்தும் பலியாமல் போகவே திகைத்தார். கீழ்நோக்கித் தான் வலுவாய் இழுக்கப்பட்டு வருவதைக் கவனித்தார். சமுத்திரத்தைப் பார்க்கும்பொழுது தனது நிழலைக்கொண்டு தன்னை இழுக்கும் ஒரு பெரிய இராக்ஷஸியை அதன்மீது படுத்திருக்கக்கண்டார். இவர் பார்ப்பதற்குள் இவரை அவள் வாய்க்குள் இழுத்துவிட்டாள். அனுமானுக்கு அனர்த்தம் வந்துவிட்டதென்று தேவதைகள் எல்லோரும் நடுங்கினுர்கள். வயிற்றிற்குட்சென்ற அனுமான் நகங்களால் அவள் மார்பைக்கிழித்து வழிபண்ணிக்கொண்டு அவ்வழியே வெளிப்பட்டு வேகமாய் ஆகாசத்தையடைந்தார்.

(இன்னும் வரும்) கே. கல்யாணராம சாஸ்திரி.